25.08.2022

**MCOP No.**1177/2018

**மனுதாரர் தரப்பு சாட்சி - 2- பாலசுப்பிரமணி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்**

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்து ஜீவானந்தம் கீழே விழுந்து கிடந்தவரை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். விபத்து நடந்த 2 நிமிடத்தில் நான் அங்கு வந்துசேர்ந்தேன். நான் சைக்கிளில் வந்தேன். டிராக்டர் ஜீவானந்தத்தின் உடம்பில் ஏறி இறங்கியது. டிராக்டரில் உள்ள பின் சக்கரம் இறந்தவரின் உடலில் ஏறி இறங்கியது. நான் டிராக்டர் சென்ற பகுதியில் இருந்து பின் பக்கமாக சென்றேன். ஜீவானந்தம் எதிரே வந்த வேன் மோதியதில் ஜீவானந்தம் டிராக்டரின் வலது பின் சக்கரத்தில் விழுந்தார் என்றால் நான் கவனிக்கவில்லை. அவர் கீழே விழுந்ததை நான் பாரத்தேன். விபத்தை தள்ளியிருந்து பார்த்ததால் விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது. விபத்தில் வேனும் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் இறந்தவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் நான் பார்த்தபோது தலைக்கவம் அந்த இடத்தில் உருண்டுகிடந்தது. அவர் தலைக்கவசம் அணிந்தபடி வாகனம் ஓட்டினாரா என்பதை நான் பார்க்கவில்லை. நான் ஜீவானந்தத்தின் அடுத்த வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் காவல் துறையில் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் இறந்தவர் என் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**3 முதல் 5 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்துக்குள்ளான இருசக்கரவாகனம் மற்றும் டிராக்டர் அரசுக்கு சொந்தமானதல்ல என்றால் சரிதான். மேற்படி வாகனம் இரண்டும் தனிநபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனக்குசொந்தமாக இருசக்கர வாகனம் உள்ளது. அதை புதிதாக வாங்கி காப்பீடு செய்துள்ளேன். நான் வாகனத்தை காப்பீடு செய்த விபரத்தை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தெரிவித்தேன். ஒருவர் தனது வாகனத்தை காப்பீடு செய்திருந்தாரா இல்லையா என்ற விபரத்தை அந்த வாகன உரிமையாளர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு தெரிவித்தால் மட்டுமே அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வாகனத்தை வாங்கி 4 வருடம் ஆகிறது. நான் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டை புதுப்பித்துக்கொள்வேன். நான் புதுப்பித்துக்கொண்டேனா இல்லையா என்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. நான் வாகனத்தை ஓட்டி செல்லும்போது யாரும் ஆவணங்களை சோதிக்க

வேண்டும் என்று கேட்டதில்லை. அவ்வாறு கேட்டால் தான் என்னிடம் ஆவணங்கள் உள்ளதா இல்லையா என்று அரசு அலுவலருக்கு தெரியும் என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கில் நான் பொய்யாக சாட்சிசொல்கிறேன் என்றால் சரியல்ல.